# <u>தாம்பரம் பெருநகராட்சி</u>

2018–ம் ஆண்டு நவம்பர் மாதம் 26.11.2018ம் நாள் திங்கட்கிழமை *<u>மாலை 4.00 மணிக்கு</u>* தாம்பரம் பெரு நகராட்சி அலுவலகத்தில் நடைபெறும் சாதாரண கூட்ட நடவடிக்கைகள்.

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
தாம்பரம் நகராட்சி.

நகராட்சி அலுவலகம்,
தாம்பரம்.
நாள். 26 .11. 2018

---

## பொருள்

**பொருள் எண். 1**

இந்நகராட்சி ஆணையாளர் அவர்களின் அக்டோபர்'2018 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு.

**பொருள் எண். 2**

இந்நகராட்சி பொறியாளர் அவர்களின் அக்டோபர்'2018 மாதத்திற்கான நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு.

**பொருள் எண். 3**

இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் அக்டோபர்'2018ல் பதிவு செய்யப்பட்ட பிறப்பு மற்றும் இறப்பு மற்றும் இறந்து பிறந்தவை பற்றிய விவரங்கள் கீழ்கண்டவாறு.

| பதிவு விவரம் | அக்டோபர்'2018 |
|---|---|
| பிறப்பு (மொத்தம்) | 366 |
| இறப்பு (மொத்தம்) | 98 |
| இறந்து பிறந்தவை | Nil |

அலுவலக குறிப்பு:–மன்றம் பதிவு செய்யலாம்.

பொருள் எண். 4

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் வார்டு எண். 38ல் கன்னடப்பாளையம் குப்பை கிடங்கில் தூய்மை இந்தியா திட்டம் 2017–18 ன் கீழ் உயிரியல் அகழாய்வு (Bio Mining) முறையில் குப்பைகளை தரம் பிரித்தெடுத்து அப்புறப்படுத்திடும் பணி மூலம் மேற்கொள்ள பார்வை 2ல் கண்டுள்ளவாறு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு, மெசர்ஸ். Zigma Global Environ Solutions Private Limited என்ற நிறுவனம் என்று நிறுவனத்திற்கு 02.07.2018ல் பணி உத்திரவு வழங்கப்பட்டது.

மேற்படி திட்டப் பணியில் போதிய இடவசதியின்மை காரணத்தினால் பணி தற்போது பணி துவங்கப்படவில்லை, மேற்படி கன்னடப்பாளையம் குப்பை கிடங்கினை சுற்றிலும் தனியாருக்கு சொந்தமான சர்வே எண்.7ல் வார்டு னு, சர்வே எண்.7ல் (பழைய சர்வே எண். 41/1பி/2சி2) காலியாக உள்ள இடத்தில் நகராட்சி மூலம் தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் மெசர்ஸ். Zigma Global Environ Solutions Private Limited என்ற நிறுவனத்தின் மூலம் உயிரியல் அகழாய்வு (Bio Mining) முறையில் குப்பைகளை தரம் பிரித்தெடுத்தெடுக்க தேவையான இயந்திர தளவாடங்கள் வசதிகள் ஏற்படுத்திட ஏதுவாக மேற்படி இடத்தின் உரிமையாளர்களான திரு. எஸ். சாந்தகுமார், த/பெ. அ.சாமிநாதன், திரு. எஸ். ஜெயசீலன், த/பெ. சாமிநாதன் ஆகியோர் அளித்த ஒப்புதல் கடிதத்தில் மாத தர வாடகையான ஒரு சதுர அடிக்கு 0.50 பைசா என்ற விலை வீதத்தில் வழங்கும் பட்சத்தில் மேற்படி காலியிடத்தினை திட்டப் பணிக்கு தருவதாக 29.10.2018ல் கடிதம் மூலமாக சம்மதம் தெரிவித்துள்ளனர்.

எனவே மேற்படி தனியாருக்கு சொந்தமான சர்வே எண்.7ல் உள்ள காலியிடத்தினை திட்டப் பணி முடிவுறும் காலம் வரை பயன்படுத்திக் கொள்ளவும், மேலும் இத்திட்டப் பணியானது மத்திய மற்றும் மாநில அரசின் பணி என்பதாலும் பணியின் முக்கியத்துவத்தினை கருத்தில் கொண்டு உடன் பணி துவங்கிட ஏதுவாக தனியார் நிலத்திற்கான மாத தர வாடகை ஒரு சதுர அடிக்கு 0.50 பைசா என்கிற வீதத்தில் சுமார் 53046 சதுர அடிக்கு ரூ. 26523/–ஐ மாதாந்திர தரைவாடகை நிர்ணயம் செய்திடவும், கன்னடப்பாளையம் குப்பை கிடங்கின் ஒரு பகுதியில் காலியானவுடன், மேற்கண்ட பணிக்கு மெஷினிரி அமைக்கும் அளவிற்கான இடம் கிடைத்தவுடன் தனியாரிடத்தினை காலி செய்து மெஷினரி மாற்றியமைத்து பணி மேற்கொள்ளவும், மேலும் தற்போது தனியார் நிலத்தினை பயன்படுத்திக் கொள்ளவும், அதற்கான தரைவாடகை செலுத்திட வேண்டி மன்றத்தின் அனுமதிக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>:– 1) சதுர அடிக்கு ஒன்றுக்கு 0.50 பைசா என்ற வீதத்தில் 53046 சதுர அடிக்கு ரூ. 26523/– ஐ மாதாந்திர தரவாடகையாக தனியாருக்கு வழங்கிட மன்றம் அனுமதிக்கலாம்.

2) மேற்படி செலவீனத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண். 5

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் பகுதியில் மாற்றுத் திறனாளிகளுக்கான சேவைகள் செய்வதற்காக மாவட்ட ஆட்சியர், காஞ்சிபுரம் அவர்களின் பரிந்துரை கடித ந.க.எண்.17816/2018/எக்ஸ்1 நாள்.27.09.2018ல் மாற்றுத்திறனாளிகளுக்கான சேவை அமைப்பின் (UNIODA) Universal Organization to the Differently Abled நிறுவனர் திரு.ராஜன் என்பவருக்கு மாற்று திறனாளிகளுக்கான சில சேவைகள் மேற்கொள்ள ஏதுவாக இடம் ஒதுக்கி தர பரிந்துரை செய்ததின் பேரில் மேற்கு தாம்பரம் பகுதியில் வார்டு எண்.36ல் துரைசாமி ரெட்டி தெருவில் IDBI வங்கி எதிரில் உள்ள காலியிடத்தில் இரும்பு பெட்டியின் அளவு 14'X8' என்ற அளவில் தற்காலிகமாக கடை அமைத்துக் கொள்ளவும், அதற்கான தரை வாடகை மாதம் ரூ.3752/—ஐ நகராட்சி கருவூலத்தில் செலுத்திடவும் மேலும் ஒவ்வொரு ஆண்டும் கூடுதல் வாடகையினை நகராட்சி வரி விதிப்பு சட்டவிதிகளின்படி வாடகை செலுத்தப் பட வேண்டும். மேற்படி இடம் நகராட்சிக்கு தேவைப்படும் பொழுது இங்கிருந்து கடையினை அகற்றி கொடுக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் மேற்படி இடத்திணில இரும்பு பெட்டியின் அளவு 14'X8' என்ற அளவில் தற்காலிகமாக மனுதாரர் சொந்த செலவில் அமைத்துக் கொள்ள மட்டும் அனுமதி வழங்கிட மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) நகராட்சிக்கு தேவைப்படும் பொழுது இங்கிருந்து இரும்பு பெட்டியினை அகற்றி கொடுக்கப்பட வேண்டும் என்ற நிபந்தனையின் பேரில் இரும்பு பெட்டியின் அளவு 14'X8' என்ற அளவில் தற்காலிகமாக அமைத்து கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.881/2018/அ1(எப்1))

பொருள் எண். 6

சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் உறுப்பினர் மற்றும் செயலர் அவர்களின் ந.க.எண். L1/369/2017 நாள் 31.5.2018 தேதிய கடிதத்தில், M/s. Aztec Properties Pvt. Ltd நிறுவனத்தின் விண்ணப்பத்தின் பேரில், தாம்பரம் நகராட்சி பகுதிக்குட்பட்ட தாம்பரம் கிராமம்,**T.S.NO.1/6PT,2/2, 3/4,4/1,5/1,6/1PT,7/9,11/2,14/1PT,17/1PT,18/1,BLOCK 41,WARD D** ல் மனைப்பிரிவு சாலை வடிவமைப்பு வரைபடத்தின்படி, சாலை மற்றும் பூங்காவிற்கான இடத்தினை, நகராட்சிக்கு (Gift Deed )தான பத்திர பதிவு மூலம் ஒப்படைக்கப்பட வேண்டும் என தெரிவித்து கடிதம் மற்றும் வரைப்படம் வரப்பெற்றதின்அடிப்படையில், நகர்மன்ற தீர்மானம் 2690 நாள் 31.7.2018ன்படி , பத்திர பதிவு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு, மனைப்பிரிவு நிறுவனத்தால் ,

பத்திர பதிவுதுறையின் மூலம் 5169 / 2018 நாள் 24.8.2018 எண்ணாக பதியப்பட்ட பதிவு பெற்ற பத்திரம் சமர்பித்ததின்பேரில், அதன் நகல் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டது.

அதன்பேரில் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தால் மேற்குறிப்பிட்டுள்ளவாறு **T.S.NO.1/6PT, 2/2, 3/4, 4/1, 5/1, 6/1PT, 7/9,11/2,14/1PT,17/1PT,18/1,BLOCK 41,WARD D** எண்ணில் மனைப்பிரிவு வரைபட ஒப்புதல் அளிக்கப்பட்டும், மனைப்பிரிவிற்கு **PPD / LO NO: 61 / 2018 Dt 1/10/2018** எண்ணிடப்பட்டும், 1/10/2018 தேதியிட்ட கடிதம் வரப்பெற்றுள்ளது. தற்போது ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள மனைப்பிரிவு வரைபடத்தில் பூங்கா (4) இடத்தினை நகராட்சிக்கு தானமாக பத்திர பதிவு மூலம் ஒப்படைக்க வேண்டும் என தெரிவித்துள்ளதின்படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, பூங்கா (4) பரப்பு 183 சமீ இடத்தினை 6462/2018 எண்ணிடப்பட்டு நாள் 22.10.2018 ஆம் தேதியில் பத்திர பதிவு செய்து நகராட்சியில் M/s. Aztec Properties Pvt. Ltd மனைப்பிரிவு நிறுவனத்தால் சமர்பிக்கப்பட்டுள்ளது.

மேலும் , மனைப்பிரிவு வரைபடத்தின்படி மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைக்க ரூ.130.00 லட்சம் , குடிநீர் குழாய்கள் அமைக்கரூ.9.00 லட்சம், மேற்பார்வை கட்டணம் ரூ.56000/–, மனைப்பிரிவு கட்டணம் ரூ.92000/– மனை அனுமதிக்கட்டணம் ரூ.150000/– மற்றும் மனைப்பிரிவு இடத்திற்கான காலிமனை வரி ரூ.1839264/– ஆகியவை மனைப்பிரிவு அமைக்கும் நிறுவனத்தால் செலுத்தப்பட்டுள்ளது. பொறியியல் பிரிவால் சாலைகள் மற்றும் தெருவிளக்குகள் மேற்கண்ட மனைப்பிரிவு நிறுவனத்தால் நல்ல முறையில் அமைக்கப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே தாம்பரம் நகராட்சி பகுதிக்குட்பட்ட தாம்பரம் கிராமம், **T.S.NO.1/6PT, 2/2,3/4,4/1,5/1,6/1PT,7/9,11/2, 14/1PT,17/1PT,18/1,BLOCK 41,WARD- D** இடத்தில் மனைப்பிரிவு **PPD / LO NO: 61 / 2018 Dt 1/10/2018** என எண்ணிடப்பட்டு வரப்பெற்ற சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தால் ஒப்புதல் அளிக்கப்பட்ட வரைபடத்தின்படி மனைப்பிரிவிற்கு அனுமதி வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– 1. சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு நடவடிக்கை மேற்கொண்டு, பூஙக ா (4) இடத்தினை தான பத்திர பதிவு மூலம் மனைப்பிரிவு நிறுவனம் நகராட்சிக்கு சமர்பிக்கப்பட்டுள்ளதை அங்கீகரிக்கலாம்.

**2.** மேற்குறிப்பிட்டுள்ளவாறு கட்டணங்கள் செலுத்தி உள்ளதாலும், சாலைகள் மற்றும் தெருவிளக்கு அமைக்கப்பட்டுள்ளதாலும், சென்னை பெருநகர் குழுமத்தால் அங்கீகரிக்கப்பட்ட வரைபடத்தில் தெரிவித்துள்ளவாறு

நிபந்தனைகளின்படி மனைப்பிரிவு அமைக்க தெரிவித்து உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

பொருள் எண்.7

தாம்பரம் நகராட்சி சேலையூர் கிராமம், பாலாஜி நகர் முதல் குறுக்கு தெருவில் நகராட்சி அனுமதி பெற்ற வரைபடத்திற்கு மாறாகவும் மேலும் பக்கத்திறந்த வெளியிடம் வரைபடத்திற்கு குறைவாக விடப்பட்டு கட்டப் பட்டுள்ள ஏழு கட்டிட உரிமையாளர்களின் மீது தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920ம் வருடம் பிரிவு 205 (1) (2)(3) கீழ் அறிவிப்பு வழங்கப்பட்டுள்ளது. இவர்கள் மீத குற்றவியல் நீதிமன்றத்தில் STC (SMALL TRAIL CASE) வழக்கு தொடர்வதற்கு குற்றசாட்டு தாள் (CHARGE SHEET) 24.08.2018 அன்று பதிவு செய்யப்பட்டது. இவ்வழக்கில் வக்காளத்து படிவம் தாக்கல் செய்வதற்கும் மற்றும் வழக்கில் ஆஜராவதற்கும் வழக்கறிஞர் கட்டணமாக (ரூ.5000X7 வழக்கு) மொத்தம் ரூ.35000/— வழங்குமாறு நகராட்சி வழக்கறிஞர் திரு.ஆர்.ரஞ்சித்குமார் அவர்கள் கடிதத்தின் மூலமாக கேட்டுக் கொண்டு உள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:** 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) வழக்கறிஞர் கட்டணம் ரூ.35000/— மற்றும் வழக்கின் இதர கட்டணங்களை செலுத்தவும் அவசியம் கருதி மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண். 4437/2018/எப்2)

பொருள் எண். 8

இந்நகராட்சியின் அலுவலக பயன்பாட்டிற்கு இயக்கப்பட்டு வரும் ஈப்பு வாகனங்களுக்கு 2018—19ம் ஆண்டில் அவ்வப்போது ஏற்படும் பேட்டரி (மின்கலப்பெட்டி) மாற்றுதல் ஆயில் சர்வீஸ் செய்தல் மற்றும் இதர பழுதுகள் மேற்கொள்ள காப்பீடு தொகைகள் செலுத்த வேண்டியதற்கான கூடுதல் உத்தேச தொகை ரூ.2.00 இலட்சத்திற்கு நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**— மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.51 /2018/இ3)

பொருள் எண். 9

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கிழக்கு தாம்பரம் வார்டு எண்.20ல் சேலையூர் சுடுகாடு பகுதியில் அமைந்துள்ள நுண்ணியிர் உரமாக்கல் மையம் (Micro Comost center) வளாகத்தில் கூடுதல் பணிகளாக சுற்றுச்சுவர்,விளக்கு வசதி, நடைபாதை, கிரில் கேட் கூடுதல் அறைகள் மற்றும் பெயர் பலகை அமைத்தல் முதலிய பணிக்கு மதிப்பீடு ரூ.24.50 இலட்சத்துக்கு நகரமன்ற தீர்மான எண்.2582 நாள். 30.05.18 ல் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 16.10.18 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்பு

நோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | சதிவிகிதம் | மதிப்பீட்டை விட அதிகம்/ குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு. B. மோகன்ராஜ் | 1.77 % | அதிகம் |
| 2 | திரு.K. ராஜ்குமார் | (–) 0.01% | குறைவு |

**அலுவலக குறிப்பு:** 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகித ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.K. ராஜ்குமார் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். /2017/இ1)

பொருள் எண். 10

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கிழக்கு தாம்பரம் வார்டு எண்.27ல் மகாலட்சுமி தெரு மற்றும் குறுக்கு தெருவிற்கு ஆர்.சி.சி மூடுபலகையுடன் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.14.50இலட்சத்துக்கு நகரமன்ற தீர்மான எண்.2684 நாள். 31.07.18ல் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 16.10.18 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | சதிவிகிதம் | மதிப்பீட்டை விட அதிகம்/ குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு. K. கிருஷ்ணமூர்த்தி | (–) 0.01% | குறைவு |
| 2 | திரு.E. வெங்கடேசன் | 0.06 % | அதிகம் |

**அலுவலக குறிப்பு:** 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகித ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு. K. கிருஷ்ணமூர்த்தி என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.124/2018/இ1)

பொருள் எண்.11

தாம்பரம் நகராட்சி–பொது சுகாதார **பிரிவு**–அரசாணை **எண்**.84 **நாள்**.25.06.2018 மாவட்ட **ஆட்சித்தலைவர் காஞ்சிபுரம் அவர்களின்** செயல்முறை **உத்திரவு** நாள்.22.10.2018–ன் படி **தாம்பரம்** நகராட்சிக்குட்பட்ட சேலையூர் **நகராட்சி** மேல் **நிலைப்பள்ளியில் இயற்கைக்கு திரும்பும்** பாதை **என்கின்ற** தலைப்பில் **நெகிழி இல்லா** மாவட்டமாக உருவாக்க **நெகிழிக்கு (Plastic)** மாற்றாக உபயோகப்படுத்த வேண்டிய பொருட்கள் **குறித்த விழிப்புணர்வு மற்றும்** மாபெறும் **கண்காட்சி (Expo 2018)** வருகின்ற **27.10.2018 (ம)** 28.10.2018 ஆகிய இரு **தினங்கள்** காலை 8.30 **மணி** முதல் மாலை 5.00 **மணி** வரை மாவட்ட **ஆட்சித்தலைவர்**

காஞ்சிபுரம் அவர்கள் தலைமையில் நடைபெற உள்ளதால், விழாவிற்கான ஆயத்த நடவடிக்கைகள் (விழா மேடை அமைப்பு, LCV விளம்பர வாகனம், புகைப்படம் எடுப்பது டீ,டிபன், சாப்பாடு வசதி மற்றும் இதர இனங்கள்) மேற்கொள்ள செலவினம் ரூ.9.00 இலட்சத்திற்கும், உள்ளூர் விலைப்புள்ளி கோருவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) பொது சுகாதார தேவையின் அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதியின் பேரில் விலைப்புள்ளி கோரியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.3471/2018/எச்1)

பொருள் எண். 12

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கிழக்கு தாம்பரம் வார்டு எண்.27ல் செந்தில் முருகன் தெரு மற்றும் குறுக்கு தெருவிற்கு ஆர்.சி.சி மூடுபலகையுடன் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.18.50இலட்சத்துக்கு நகரமன்ற தீர்மான எண்.2688, நாள். 31.07.18ல் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 16.10.18 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | சதிவிகிதம் | மதிப்பீட்டை விட அதிகம்/ குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு. K. கிருஷ்ணமூர்த்தி | 0.08% | அதிகம் |
| 2 | திரு.E. வெங்கடேசன் | (–) 0.01% | குறைவு |

அலுவலக குறிப்பு: 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகித ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.E. வெங்கடேசன் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.124/2018/இ1)

பொருள் எண். 13

தாம்பரம் நகராட்சி பொது சுகாதார பிரிவு தாம்பரம் நகராட்சி பகுதிகளில் சேகரம் செய்யப்படும் திடக்கழிவுகளை பல்லவபுரம் மற்றும் தாம்பரம் ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் வேங்கட மங்கலத்திற்கு கன்னடபாளையம் குப்பை மாற்று நிலையத்தின் மூலமாக கொண்டு செல்லப்பட்டது. கடந்த 13.09.2018 முதல் Essel நிறுவனம் தனது ஒப்பந்ததாரர் பிரச்சனை காரணமாக கன்னடபாளையத்திலிருந்து குப்பைகளை எடுத்துச் செல்லாமல் குப்பை மாற்று நிலையத்தில் குப்பைகள் தேங்கி உள்ளது. இதனால் வாகனங்கள் சென்று குப்பைகளை கொட்ட முடியாத நிலையில் நகரில் குப்பைகள் தேக்கம் அடைந்து உள்ளது. எனவே, பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் 18.09.2018ம் தேதிய முன் அனுமதியின்

பேரில் உள்ளூர் விலைப்புள்ளி கோரியதில் இரண்டு விலைப்புள்ளிகள் நேரில் பெறப்பட்டன. (24.09.2018ல்) பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விவரம்.

1.SRI Blue Metal மேற்கு தாம்பரம் – ரூ.320/– per tonne

2.நல்லதம்பி, கன்னடபாளையம், மேற்கு தாம்பரம் –ரூ.330/– per tonne

பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் SRI Blue Metal, மேற்கு தாம்பரம் என்பவர் ரூ.320/– per tonne என வழங்கியுள்ளார். இது ஏற்கனவே Essel நிறுவன ஒப்பந்ததாரர்களுக்கு தாம்பரம் நகராட்சியின் திடக்கழிவுகளை அகற்ற வழங்கப்பட்ட ரூ.327/– tonne என்ற விலைவிகிதத்தினை விட குறைவாக உள்ளதால் இவ்விலை விகிதத்தினை ஏற்று அன்னாருக்கு பணி உத்திரவு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 4307/2018/எச்1)

பொருள் எண். 14

தாம்பரம் நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டம் கன்னடபாளையம் குப்பை மாற்று நிலையத்திலிருந்து வேங்கடமங்கலம் குப்பை கொட்டும் இடத்திற்கு திடக்கழிவுகளை JCB வாகனம் மூலம் வாடகை அடிப்படையில் கொண்டு தனி அலுவலரின் 18.09.18ம் தேதிய முன் அனுமதியின் பேரில் 24.09.2018 ல் பொது சுகாதார அவசர அவசியம் கருதி விலைப்புள்ளிகள் நேரில் பெறப்பட்டது.

பெறப்பட்ட விலைப்புள்ளிகளின் விவரம்.

1. Sri Blue Metals
   75, பிள்ளையார் கோவில் தெரு – ரூ.847/– per hour
   கன்னடபாளையம், மேற்கு தாம்பரம்
2. நல்லதம்பி
   75/20, கன்னடபாளையம், –ரூ.900/– per hour
   மேற்கு தாம்பரம்

பெறப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியாக Sri Blue Metal, கன்னடபாளையம், மேற்கு தாம்பரம் என்பவர் வழங்கியுள்ளதை ஏற்று அன்னார்க்கு பணி உத்திரவு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** அ) மன்றம் அனுமதி வழங்கலாம்.

ஆ) பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 4307/2018/எச்1)

பொருள் எண். 15

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் வார்டு எண்.38ல் கழிவுநீர் சுத்திகரிப்பு வளாகத்தில் அமைக்கப்பட்டும் வரும் நுண்ணுயிர் உரமாக்கதல் மைய வளாகத்திற்கு சுற்றுச்சுவர் மற்றும் முன்புறம் பேவர் பிளா. துரை அமைத்தல் பணிக்கு மதிப்பீடு ரூ.24.00இலட்சத்துக்கு நகரமன்ற தீர்மான எண்.2587, நாள். 30.05.18ல் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 16.10.18 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | சதிவிகிதம் | மதிப்பீட்டை விட அதிகம்/ குறைவு |
|---|---|---|---|
| 1 | M/s. KP Constructions | 1.24 % | அதிகம் |
| 2 | Thiru. B.Mohanraj | (–) 0.03% | குறைவு |

**அலுவலக குறிப்பு:** 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகித ஒப்பந்தப்புள்ளி வழங்கிய திரு.B.மோகன்ராஜ் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.718/2018/இ1)

பொருள் எண். 16

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் வார்டு எண்.32ல் திருவள்ளுவர் தெரு பிரதான சாலை சந்திப்பு கம்பர் தெருவில் ஆர்.சி.சி பாலம் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.24.50இலட்சத்துக்கு நகரமன்ற தீர்மான எண். ––––, நாள்.31.10.18ல் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 07.11.18 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | சதிவிகிதம் | மதிப்பீட்டை விட அதிகம்/ குறைவு |
|---|---|---|---|
| 1 | **திரு. P. சந்திரன்** | 0.43 % | அதிகம் |
| 2 | **திருமதி. V. மீனாள்** | (–) 0.01% | குறைவு |

**அலுவலக குறிப்பு:** 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகித ஒப்பந்தப்புள்ளி வழங்கிய **திருமதி. V. மீனாள்** என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.124/2018/இ1)

பொருள் எண். 17

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் வார்டு எண்.1ல் அம்மன் நகர் கோயில் தெரு பகுதியில் அமைக்கப்பட்டுள்ள பசுமை உரக்குடில் வளாகத்தில் சுற்றிலும் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.24.00இலட்சத்துக்கு தனி அலுவலரின் முன் அனுமதியின் பேரில் 24.10.18 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டது. மேலும் நகரமன்ற தீர்மானம் எண்.2932 நாள்.31.10.2018 ல் மேற்குறிப்பிடப்பட்ட பணிக்கு ஒப்புதலும் பெறப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்டவாறு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | சதிவிகிதம் | மதிப்பீட்டை விட அதிகம்/ குறைவு |
|---|---|---|---|
| 1 | **மெசர்ஸ். சிம்லா கூல்மேக்கர்ஸ்** | (–) 0.06% | குறைவு |
| 2 | **மெசர்ஸ். Bigbox Engg Pvt.Ltd** | 0.44 % | அதிகம் |

**அலுவலக குறிப்பு: 1)** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகித ஒப்பந்தப்புள்ளி வழங்கிய மெச**ர்ஸ். சிம்**லா கூ**ல்**மே**க்கர்ஸ்** என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நகரமன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கிட மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.124/2018/இ1)

பொருள் எண். 18

தாம்பரம் பெரு நகராட்சி அலுவலக கட்டிடத்தில் பயன்படுத்தப்பட்டு வருகின்ற தொலைபேசிகள் (Office Intercom) மற்றும் EPABX System ஒயரிங் கேபிள்கள் ஆகியவற்றில் ஏற்படும் பழுதுகளை உடனுக்குடன் சரி செய்திட வேண்டி தனியார் மூலமாக ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ளும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.0.40 இலட்சத்திற்கு நகரமன்ற தீர்மான எண். நாள்.30.10.2018ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 12.11.2018 அன்று விலைப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட குறைவு/அதிகம் |
|---|---|---|
| 1 | மெசர்ஸ்.சூப்பர் சர்வீஸ் | 37500/– குறைவு |
| 2 | மெசர்ஸ்.ஸ்பார்க் கம்யுனிகேஷன் | 42500/– அதிகம் |
| 3 | மெசர்ஸ்.சிஸ்மெட்டிக் கம்யுனிகேஷன் | 45500/– அதிகம் |

**அலுவலக குறிப்பு:–1)** மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக வழங்கிய மெசர்ஸ். சூப்பர் சர்வீஸ் என்ற நிறுவனத்தின் விலைப்புள்ளியினை

ஏற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.124/2018/இ1)

பொருள் எண். 19

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கிழக்கு தாம்பரம் வார்டு எண். 27ல் குறிஞ்சி நகர் 2வது தெரு, பொன்னன் நகர், 1வது,2வது,3வது தெருவிவிறகு தார் சாலை மற்றும் மழைநீர் வடிகாலவாய் அமைத்தல் மற்றும் குறிஞ்சி நகர் 1வது தெருவிற்கு தார் தளம் அமைத்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.24.50இலட்சத்துக்கு நகரமன்ற தீர்மான எண்.2760, நாள்.31.08.18ல் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 24.10.18 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | சதிவிகிதம் | மதிப்பீட்டை விட அதிகம்/ குறைவு |
|---|---|---|---|
| 1 | **திரு. N. கோபாலகிருஷ்ணன்** | 0.53 % | அதிகம் |
| 2 | **திரு. R. ராஜேஷ்** | (–) 0.15% | குறைவு |

**அலுவலக குறிப்பு:** 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான விலை விகித ஒப்பந்தப்புள்ளி வழங்கிய **திரு. R. ராஜேஷ்** என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நகரமன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கிட மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.124/2018/இ1)

பொருள் எண். 20

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் வார்டு எண். 38ல் கன்னடப்பாளையம் குப்பை கிடங்கின் பின்புறம் உள்ள பசுமை உரக்குடில் வளாகததில் 15 கேவிஏ திறன்கொண்ட சூரிய மின்கலன் அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.24.00இலட்சத்துக்கு நகரமன்ற தீர்மான எண்.2828, நாள்.28.09.18ல் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 24.10.18 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | சதிவிகிதம் | மதிப்பீட்டை விட அதிகம்/ குறைவு |
|---|---|---|---|
| 1 | M/s. Big Fox Engineering Pvt.Ltd | 0. 81% | அதிகம் |
| 2 | M/s. Simla Cool Makers | (–) 0.01% | குறைவு |

**அலுவலக குறிப்பு: 1)** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய M/s. Simla Cool Makers என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நகரமன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கிட மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். /2018/இ3)

பொருள் எண். 21

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் வார்டு எண். 28ல் தமிழ்பூங்கா மேல்நிலை நீர்தேக்க தெதட்டி, வார்டு எண். 35ல் முத்துதுங்கம் பூங்கா நீர்தேக்க தொட்டி விடுபட்ட பகுதிகள் பேவர் பிளாக் தளம் அமைத்தல் மற்றும் மேல்நிலை நீர்தேக்க தொட்டி பராமரிப்பு பணிகள் வால்வு தொட்டிடிள் கட்டுதல், பூச்செசகள் அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.18.00இலட்சத்துக்கு நகரமன்ற தீர்மான எண்.2805, நாள்.31.08.18ல் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 24.10.18 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | சதிவிகிதம் | மதிப்பீட்டை விட அதிகம்/ குறைவு |
|---|---|---|---|
| 1 | **திரு. P. ரகுநாதன்** | (–)0. 03% | குறைவு |
| 2 | M/s. SRI LCR & Sons | 0.45% | அதிகம் |

**அலுவலக குறிப்பு: 1)** மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய **திரு. P.** ரகுநாத**ன்** என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நகரமன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கிட மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். /2018/இ3)

பொருள் எண்.22

ங்இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கிழக்கு தாம்பரம் வார்டு எண்.27 ல் அருள் நகர் மழைநீர் வடிகால்வாயுடன் மூடுபலகை அமைத்தல் மற்றும் சிறபாலம் அமைக்கும் பணிக்கு மதிப்பீடு ரூ.22.00 இலட்சத்துக்கு நகரமன்ற தீர்மானம் எண்.2765 நாள்.31.08.2018 ல் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 24.10.2018 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | சதவிகிதம் | மதிப்பீட்டை விட குறைவு/அதிகம் |
|---|---|---|---|

| | | | |
|---|---|---|---|
| 1 | N. கோபாலகிருஷ்ணன் | 0. 27% | அதிகம் |
| 2 | P. பாலகிருஷ்ணன் | –0.22% | குறைவு |

**அலுவலக குறிப்பு: 1)** மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக வழங்கிய திரு. P. பாலகிருஷ்ணன் என்ற ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.124/2018/இ1)

பொருள் எண்.23

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பாதாள சாக்கடை திட்டப்பணிகளாலும் மற்றும் அதிக போக்குவரத்து காரணமாகவும், இயற்கை இடர்பாடுகள் காரணமாகவும் சேதமடைந்த சாலைகளை தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு **(TURIP-phase-II) 2016–17** திட்டத்தின் கீழ் மறு சீரமைப்பு செய்து அபிவிருத்தி செய்ய ரூ. 1500.00 லட்சம் மதிப்பீட்டில், 8 சிப்பங்களாக பிரித்து செயல்படுத்த, நகரமன்ற தீர்மான எண்.1508, நாள் 29.07.16ல் அனுமதி பெறப்பட்டதன் பேரில் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் நிர்வாக அனுமதி செயல்முறை ந.க.எண். 2909/2016/இ3, நாள் 30.08.2016 ல் வழங்கப்பட்டது. மேலும் மேற்படி திட்ட மதிப்பீடுகளுக்கு தலைமைப் பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம் அவர்களின் செயல்முறை ந.க.எண்.1041/2016/DO1, நாள்.07.09.2016 அன்று தொழில்நுட்ப அனுமதி வழங்கப்பட்டு , 27.09.2016ல் ஒப்பந்தபுள்ளி பெறப்பட்டு நகரமன்ற தீர்மான எண். 1551, நாள். 02.12.2016ல் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர்களது ஒப்பந்தபுள்ளிக்கு ஒப்புதல் பெறப்பட்டு, 09.12.2016ல் பணி உத்திரவு வழங்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது.

மேற்படி திட்டத்தின் கீழான சிப்பம் எண். 1க்கு மெசர்ஸ்.மார்ஸ் கன்ஸ்ரக்ஷன் என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டது. இச்சிப்ப பணியில் அய்யாசாமி தெரு,அழகேசன் தெரு, துரைசாமிபிள்ளை தெரு (வார்டு எண்.10) ஆகிய தெருக்களில் மழைநீர் வடிகால்வாய் உயர்த்தி தார் தளம் அமைக்கும் பணி, முத்துரங்கம் தெரு, துரைசாமி ரெட் தெரு, எம்.கே. ரெட்டி தெரு பக்தவச்சலம் தெரு (வார்டு எண்.10) வெங்கடேசன் தெரு, வி.ஏ.ஓ. தெரு மற்றும் காமராஜ் தெரு (வார்டு எண்.36) ஆகிய தெருக்களுக்கு தார் சாலை அமைத்தல் பணி முடிக்கப்பட்டது. மேற்படி திட்டப்பணில் சிப்பம் எண். 1க்கு ரூ. 188.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டதில் இதுவரை ரூ. 120.00 இலட்சம் மட்டுமே செலவு மேற்கொள்ளப்பட்டுள்ளது மீதமுள்ள ரூ. 68.00 லட்சத்திற்கு மேற்படி பகுதியின் அருகே உள்ள வார்டு பகுதிகளில் சாலை சீரமைக்கும் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி கோரப்படுகிறது.

மேற்படி திட்டப் பணி அரசு மான்யத்தில் மேற்கொள்ளப்படுவதால், பணிகள் முடிவடைந்த சாலைகளை சீரமைக்க திட்டநிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதால்

இத்திட்டப் பணியை முடித்து அரசுக்கு முடிவு அறிக்கை அனுப்ப வேண்டியுள்ளதாலும், மேலும் இத்திட்டப்பணியில் கூடுதலாக வார்டு எண்.34ல் லோகநாதன் தெரு, சிவானந்தம் தெரு, வார்டு எண்.38ல் அமல் நகர் பிரதான சாலை, அமல் நகர் 4வது தெரு, காந்தி நகர் பிரதான சாலை மற்றும் கன்னடப்பாளையம் பஜனை கோயில் தெரு ஆகிய பகுதியில் உள்ள சாலைகளில் பாதாள சாக்கடை திட்டப் பணிகள் முழுமையாக முடிவுற்று குண்டும் குழியுமான சாலையை சீரமைக்க வேண்டிய நிலை உள்ளதால் மேலே குறிப்பிட்டுள்ள சாலைகளுடன் இந்த சாலைகளையும் சீரமைக்கும் பணியினை குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர் மெசர்ஸ். மார்ஸ் கன்ஸ்ரக்ஷன் என்ற நிறுவனத்தின் மூலமே பணியில் அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு தொகைக்குள் செய்து முடித்திட மன்றத்தின் அனுமதிக்கும், பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :– மன்றம் அனுமதி வழங்கலாம்

(ந.க.எண்.261/2016/இ1)

பொருள் எண். 24

தாம்பரம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பொது சுகாதார பிரிவில்தனியார் மூலம் பணிகளை மேற்கொள்ளும் துப்புரவு பணியாளர்கள் மற்றும் DBC பணியாளர்களின் வருகை பதிவேட்டினை பதிவு செய்திட 12 எண்ணம் முகம் பார்த்து கை ரேகை பதிவு செய்யும் வருகை பதிவேடு கருவி (Finger Print Scanner with Face ID) பொருத்தும் பணிக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.5.00 இலட்சத்திற்கு நகரமன்ற தீர்மானம் எண். நாள் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 14.11.2018 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை விட குறைவு/அதிகம் |
|---|---|---|
| 1 | மெசர்ஸ். துக்காராம் கம்யூட்டர்ஸ் | ரூபாய் 414000/–குறைவு |
| 2 | மெசர்ஸ். கனிஷ் சிஸ்டம் | ரூபாய் 429000/–அதிகம் |

அலுவலக குறிப்பு: 1) மன்றம் அனுமதி வழங்கலாம்.

2) வரப்பெற்ற மூன்று ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக வழங்கிய மெசர்ஸ். துக்காராம் கம்யூட்டர்ஸ் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று நகரமன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்தரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண். /2018/இ3)

பொருள் எண். 25

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட அம்பேத்கார் சுடுகாடு பகுதியில் உள்ள பசுமை உரக்குடில் வளாகத்தல் கூடுதல பணிகளாக சுற்றுசுவர், விளக்கு வசதி, நடைபாதை கிரில்கேட் கூடுதல் அறைகள் மற்றும் பெயர் பலகை அமைத்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.24.00இலட்சத்துக்கு நகரமன்ற தீர்மான எண்.2824 நாள். 28.09.18ல் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 24.10.18 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | சதிவிகிதம் | மதிப்பீட்டை விட அதிகம்/ குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.K. கிருஷ்ணமூர்த்தி | (–) 0.01% | குறைவு |
| 2 | திரு.E. வெங்கடேசன் | 3.08 % | அதிகம் |

**அலுவலக குறிப்பு:** 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய திரு.K. கிருஷ்ணமூர்த்தி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று நகரமன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.718/2018/இ1)

பொருள் எண். 26

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கிழக்கு தாம்பரம் பகுதியில் மேற்கு தாம்பரம் பகுதிகளில் உள்ள நம்ம டாய்லெட் மற்றும் சமுதாய கழிப்பிடங்களை ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ள 2017–18ம் கீழ் ஆண்டு பராமரிப்பு பணி அடிப்படையில் ரூ. 9.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள நகரமன்ற தீர்மான எண். 1862, நாள். 31.07.2017ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் 23.08.2017ல் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளின் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த மெசர்ஸ். ஜான்சன் எலக்ட்ரிகல்ஸ் ஓர்க்ஸ் என்ற நிறுவனத்திற்கு நகரமன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி (நகரமன்ற தீர்மான எண். 1908, நாள். 28.09.2017) அளிக்கப்பட்டதின் பேரில் 31.08.2017ல் பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்போது மேற்படி ஆண்டு பராமரிப்பு பணி 31.08.2018ல் அன்று முடிவடைவதால், இப்பணியினை தொடர்ந்து கொண்டு வரும் மெசர்ஸ். ஜான்சன் எலக்ட்ரிகல்ஸ் ஓர்க்ஸ் நிறுவனத்திற்கு செப்டம்பர் 2018 முதல் ஆகஸ்ட் 2019 வரையிலான ஓராண்டு காலத்திற்கு பராமரிப்பு பணிக்காலத்தினை நீட்டிப்பு செய்திடவும், அதற்கான செலவீனத்தை ஏற்கனவே அளிக்கப்பட்ட அதே மதிப்பீட்டு விலை விகிதம் அடிப்படையாக கொண்டு ரூ.

9.00 இலட்சம் மதிப்பீட்டிற்கு மிகாமல் மெசர்ஸ். ஜான்சன் எலக்ட்ரிகல்ஸ் என்ற நிறுவனம் மூலமே பணி மேற்கொள்ள வேண்டி மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**– 1) மன்றம் அனுமதி வழங்கலாம்

2) மெசர்ஸ். ஜான்சன் எலக்ட்ரிகல்ஸ் நிறுவனத்திற்கு செப்டம்பர் 2018 முதல் ஆகஸ்ட் 2019 வரையிலான ஓராண்டிற்கு பணி காலத்தினை நீட்டிப்பு செய்திட நகரமன்ற அனுமதி வேண்டி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

3) ஓராண்டு காலத்திற்கு ஆண்டு பராமரிப்பு பணிக்கான செலவீனத் தொகை ரூ.9.00 இலட்சத்திற்கு நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்.216/2016/இ1)

பொருள் எண். 27

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கிழக்கு தாம்பரம் வார்டு எண். 20ல் நியூ பாலாஜி நகர் 1வது,2வது தெரு மற்றும் பொன்னியம்மன் கோவில் தெரு விரிவு பகுதியில் அமைக்கும் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 7.00 இலட்சத்திற்கு பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:**– மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். 124/2018/இ1)

பொருள் எண். 28

தாம்பரம் நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் தாம்பரம் நகராட்சி பகுதிகளில் 7 நுண் உர செயலாக்க மையங்களும் 20 மிகச்சிறிய நுண் உர செயலாக்க மையங்களும் துவங்கப்பட்டு உஉம் தயாரிப்பு பணி நடைபெற்று வருகிறது. இவற்றில் 20 நுண் உர செயலாக்க் (சிறிய) மையங்களுக்கு (Onsite Comost Center) குப்பைகளை அரைக்கும் இயந்திரங்கள் வாங்குவதற்கு (6Nos) (Shredding machines) தனிஅலுவலரின் 17.09.2018ம் தேதிய முன் னுமயின் பேரில் 02.11.2018. ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டுள்ளன. பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் விவரம்

| | | |
|---|---|---|
| 1 | M. சின்னதுரை<br>77, வடக்கு மாட வீதி<br>திருவொற்றியூர், சென்னை 19. | ரூ. 1,31,000/– Per unit Excluding GST 18% |
| 2 | C. பத்ரகாளி,<br>55/8, வடக்கு மாட வீதி<br>திருவொற்றியூர், சென்னை 19. | ரூ. 1,31,000/– Per unit Excluding GST 18% |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளியாக C. பத்ரகாளி, சென்னை 19 என்பவரிரின ஒப்பந்தபுள்ளியினை ஏற்று அன்னார்க்கு பணி உத்திரவு வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** 1. மன்றம் அனுமதி வழங்கலாம்

2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 4440/2018/எச்1)

பொருள் எண். 29

தாம்பரம் நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் பகுதியில் வார்டு எண்.38ல் கன்னடப்பாளையம் நடுத்தெரு,பிள்ளையார் கோவில் தெருக்களுக்கு மழைநிர் வடிகால்வாய் அமைக்கும் பணிக்கு ரூ. 9.00 மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள நகரமன்ற தீர்மான எண். 2806, நாள். 31.08.18ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணியில் கன்னடப்பாளையம் நடுத்துதெரு, பிள்ளையார் கோவில் தெரு என்பது கன்னடப்பாளையம் பஜனை கோயில் தெரு என திருத்தம் செய்திட மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதி வழங்கலாம்

**(ந.க.எண்.124/2018/இ1)**

பொருள் எண். 30

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் பகுதியில் வார்டு எண். 3ல் நேரு நகர்,வார்டு எண்.9ல் வனத்துறை சாலை, வார்டு எண்.38ல் பஜனை கோயில் ல்தரு, வார்டு எண். 37ல் உள்ள கிணற்று தெருவில் உள்ள அங்கன்வாடி மற்றும் கழிப்பிடம் ஆகிய பகுதிகளுக்கு புதியதாக 1.5 எச்.பி மின் மோட்டார் அமைத்து பேனல் போர்டு அமைத்தல் முத்துரங்கம் பூங்காவில் 30 எச்.பி ஸ்டாட்டர் 35 Sqm கேபிள் அமைத்தல் மற்றும் லாரி தண்ணீர் பிடிக்கும் மோட்டார் ர்ஸடாட்டர் பழுது சரி செய்தல் சானடோரியம் பேருந்து நிலையத்தில் 200 AMPS பிரதான சுவிட்ச் மற்றும் 500 லிட்டர் 2 எண்ணம் சின்டெக்ஸ் தொட்டி அமைத்தல் பணி முல்லை நகர் 50 எம்.எம் பைப்லைன் மாற்றியமைத்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 5.00 இட்சத்திற்கு நகரமன்ற தீர்மான எண். 2492, நாள். 30.04.2018ல் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து மேற்படி பணிக்கு 13.11.2018அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளுக்கு ஒப்புநோக்கு பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரின் பெயர் | சுதவீதம் | அதிகம்/குறைவு |
|---|---|---|---|
| 1 | மெசர்ஸ். ஜான்சன் எலக்ட்ரிகல்ஸ் ஓர்க்ஸ் | (–) 0.06% | குறைவு |
| 2 | மெசர்ஸ்.P.G.எலக்ட்ரிகல்ஸ் ஓர்க்ஸ் | (–) 2.50% | அதிகம் |

**அலுவலக குறிப்பு:–**1) மன்றம் அனுமதி வழங்கலாம்

2) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைத்து ஒப்பந்தபுள்ளி வழங்கிய மெசர்ஸ். ஜான்சன் எலக்ட்ரிகல்ஸ் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்ற நகரமன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கிட மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண். 51/2018/இ2)

பொருள் எண். 31

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் வார்டு எண். 36ல் ஜீவா வணிக வளாக மார்கெட் பகுதியில் SS கைப்பிடி தடுப்புகள் அமைத்தல் மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநரக அலுவலகத்திற்கான வாகன நிறுத்திமிடம் அமைக்கும் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 9.90 இலட்சத்திற்கு நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:– மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.124/2018/இ1)

பொருள் எண். 32

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட கிழக்கு தாம்பரம் வார்டு எண். 24ல் வடக்கு தெரு மற்றும் எஸ்.எஸ்.பிள்ளை தெருவிற்கு கைப்பிடி பம்பு மற்றும் சின்டெக்ஸ் தொட்டி அமைக்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 3.50 இலட்சத்திற்கு நகரமன்ற தீர்மான எண்.2470, நாள். 30.04.2018ல் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 13.07.2018ல் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளியில் குறைந்த ஒப்பந்ததாரர் திரு.T. ஐயப்பன் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று நகரமன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி நாள். 13.07.2018ல் அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் பணி உத்திரவு வழங்கப்பட்டது. மேற்படி இடத்தில் ஆழ்துளை கிணறு அமைத்திட நில அமைப்பியல் வல்லுநர் (Geologist) கொண்டு நீரோட்ட சோதனை செய்த போது நீரோட்டம் இல்லை என தெரியவந்ததின் பேரில் அருகில் உள்ள வார்டுகளில் ஆழ்துளை கிணறு அமைக்க பொதுமக்களின் கோரிக்கையின் பேரில் வார்டு எண். 25ல் பான்ட்ஸ் காலனி மற்றும் வார்டு எண்.16ல் நாகரத்தினம் தெருவில் மாற்றி அமைக்க மன்றத்தின் அனுமதிக்கவும், மேலும் மேற்படி பணிக்கு எற்கனவே குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த ஒப்பந்ததாரர் திரு.கூ.ஐயப்பன் என்பவரின் மூலமே அனுமதிக்கப்பட்ட மதிப்பீடு தொகைக்குள் செய்து முடித்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :–1. மன்றம் அனுமதிக்கலாம்

2. வார்டு எண்.24ல் வடக்கு தெரு மற்றும் எஸ்.எஸ்.பிள்ளை தெருக்களுக்கு பதிலாக வார்டு எண்.25 ல் பான்ட்ஸ் காலனி மற்றும் வார்டு எண்.16ல் நாகரத்தினம் நகர் தெருவினை மாற்று இடமாக தேர்வு செய்ததினை மன்றம் அங்கீகரிக்கலாம்.

3. குடிநீர் பணியின் அவசரம் அவசியம் கருதி நகரமன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணியினை மேற்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 51/2018/இ3)

பொருள் எண். 33

தாம்பரம் நகராட்சி பொது சுசாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் 7 நுண் உரசெயலாக்க மையம், 20 மிகச் சிறிய நுண்உரசெயலாக்க மையம் ஆகியவற்றிக்க தாம்பரம் நகராட்சி பகுதிகளில் சேகரமாகும் திடக்கழிவுகளில் மக்கும் குப்பைகளை மேற்படி மைங்களில் கொண்டு சேர்பதற்கு தனிஅலுவலரின் 22.10.2018 முன்அனுமதியின் பேரில் 09.11.2018ல் ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்கண்ட இரரணடு ஒப்பந்தபுள்ளிகள் பெறப்பட்டுள்ளன பெறப்பட்ட ஒப்பந்தபுள்ளிகளின் விவரம்

| | | |
|---|---|---|
| 1 | R.R. சர்வீஸ்<br>அரக்கோணம் TK | ரூ. 2,600/— வாடகை டீசல் டிரைவர் பேட்டா உள்பட |
| 2 | தி வாலாஜாபேட் அக்ரோ Engg & சர்வீஸ் Co-op centre Ltd<br>வாலாஜாபேட் | ரூ. 2,750/— வாடகை டீசல் டிரைவர் பேட்டா உள்பட |

பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய R.R. சர்வீஸ் அரக்கோணம் என்பவர் வழங்கியுள்ளதை ஏற்று அன்னார்க்கு பணி உத்திரவு வழங்குவதற்கு மமனறத்தின் அனுமதி வேண்டடப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:—** 1. மன்றம் அனுமதி வழங்கலாம்

2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 4577/2018/எச்1)

பொருள் எண். 34

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கிழக்கு தாம்பரம் வார்டு எண்.20ல் பாரதி பூங்கா, அம்பேத்கார் சுடுகாடு ஆகியவற்றினை 2018—19ஆம் ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ. 7.00 இலட்சத்திற்கு OSR நிதி / பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொள்ள மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:— 1. மன்றம் நிர்வக அனுமதி வழங்கலாம்.

2. நகரமன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண். 124/2018/இ1)

பொருள் எண். 35

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் வார்டு எண். 32ல் ராஜ்மோகன் நகர் பிரதான சாலையில் ஒரு பகுதியில் தாங்கு சுவர்(Retaining Wall) மற்றொரு பகுதியில் மழைநீர் வடிகால்வாயுடன் ஆர்.சி.சி மூடுபலகை அமைத்தல் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 7.50 இலட்சத்திற்கு நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–** மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.124/2018/இ1)

பொருள் எண். 36

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் வார்டு எண். 1ல் அம்மன் கோயில் தெரு பின்புறம் உள்ள புறா குட்டையினை தூர் வாரப்பட்டு ஆழப்படுத்தப்பட்டுள்ளது. மேலும் அப்பகுதியில் சுற்றிலும் சுற்றுச்சுவர், நடைபாதை மற்றும் விளக்கு வசதிகள் ஏற்படுத்திடும் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 20.00 இலட்சத்திற்கு நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.124/2018/இ1)

பொருள் எண். 37

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் வார்டு எண். 1ல் அற்புதம் நகர் பகுதியில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள மழைநீர் வடிகால்வாய்க்கு ஆர்.சி.சி மூடுபலகை அமைக்கும் பணி மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.60 இலட்சத்திற்கு நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ள உரிய நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு:–**மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்.

**(ந.க.எண்.124/2018/இ1)**

பொருள் எண். 38

தாம்பரம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் பொது சுகாதார பிரிவில் தனியார் மூலம் துப்புரவு பணிகளை மேற்கொள்ளும் துப்புரவு பணியாளர்கள் மற்றும் DBC பணியாளர்களின் வருகை பதிவேட்டினை பதிவு செய்திட 12 எண்ணம் முகம் பார்த்து கைரேகை பதிவு செய்யும் வருகை பதிவேடு கருவி (Fingerprint Scanner with Face ID) பொருத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ. 5.00 இலட்சத்திற்கு நகரமன்ற தீர்மான எண்.2893 நாள். 28.09.2018ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 14.11.2018 அன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளில்

ஒப்புநோக்குப் பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீட்டை வி குறைவு / அதிகம் |
|---|---|---|
| 1 | மெசர்ஸ். துக்காராம் கம்யூட்டர்ஸ் | 488520/— குறைவு |
| 2 | மெசர்ஸ். கனிஷ் சிஸ்டம் | 506220/— அதிகம் |

அலுவக குறிப்பு: —1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) வரப்பெற்ற 2 விலைபுள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக வழங்கிய மெசர்ஸ். துக்காராம் கம்யூட்டர்ஸ் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தபுள்ளியினை ஏற்று நகரமன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.
(ந.எண்.124/2018/இ3)

பொருள் எண். 39

தாம்பரம் நகராட்சி பொது சுகாதாரம் பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் திடக்கழிவுகளை அகற்றுவதற்கு பயன்படுத்தப்படும் TN22-AP-1184 Eicher வாகனம் 02.12.2018ல் தகுதி சான்று பெற வேண்டி வாகனத்தின் சில பழுதுகளை மேற்கொள்வதற்கு ஒப்பந்தபுள்ளி கோருவதற்கும் தோராய செலவினம் ரூ. 1.50 இலட்சத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:— 1. மன்றம் அனுமதி வழங்கலாம்
2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று ஒப்பந்தபுள்ளி கோரியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 5027/2018/எச்1)

பொருள் எண். 40

தாம்பரம் நகராட்சி பொது சுகாதார பிரிவு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் கன்னடபாளையம் குப்பை மாற்று நிலையத்திலிருந்து வேங்கடமங்கலம் குப்பை கொட்டும் இடத்திற்கு JCB வாகனம் மூலம் திடக்கழிவுகளை எடுத்து செல்ல தனி அலுவலரின் 12.11.2018 ம் தேதிய முன் அனுமதியின் பேரில் 24.11.2018 ல் விலைப்புள்ளி கோரியதில் மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது. விவரம்

| | | |
|---|---|---|
| 1. | K.E.T எர்த் மூவர்ஸ், கடப்பேரி, மேற்கு தாம்பரம் | ரூ.847/— per hour |
| 2. | T. கருணாகரன் எர்த் மூவர்ஸ், கடப்பேரி, மேற்கு தாம்பரம் | ரூ.900/— per hour |
| 3. | சந்தியா எர்த் மூவர்ஸ், சென்னை 45 | ரூ.920/— per hour |

பெறப்பட்ட விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளியாக K.E.T எர்த் மூவர்ஸ், per hour ரூ.847/— என வழங்கியுலூளதை ஏற்று அன்னாருக்கு பணி உத்தரவு வழங்கக் கோரி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு:— 1. மன்றம் அனுமதி வழங்கலாம்

2. பொது சுகாதார அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன்அனுமதியின் பேரில் பணி உத்தரவு வழங்கியதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.
(ந.க.எண். 4440/2018/எச்1)

பொருள் எண். 41

தாம்பரம் நகராட்சிக்கு எல்லைக்குட்பட்ட கிழக்கு தாம்பரம் பகுதியில் வார்டு எண். 18ல் அமைந்துள்ள திருப்பூர் குமரன் பூங்காவில் ஆழ்துளை கிணறு அமைத்தல் மற்றும் மின்மோட்டார் அறை கட்டுதல் பணி மேற்கொள்ள ரூ. 3.00 மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள நகரமன்ற தீர்மான எண். 2610, நாள். 30.05.18ல் நகரமன்றம் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது, மேலும் 07.08.2018ல் ஒப்பந்தபுள்ளி பெறப்பட்டத்தில் குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய மெசர்ஸ். சிம்லா கூல்மேக்கர்ஸ் என்ற நிறுவனத்திற்கு நகரமன்ற தீர்மான எண்.2834, நாள்.28.09.2018ல் ஒப்புதல் பெறப்பட்டு 03.10.2018ல் பணி உத்திரவு வழங்கப்பட்டு, தற்போது பணிகள் அனைத்தும் முழுமையாக முடிக்கப்பட்டுள்ளது. மேற்படி பணியானது பூங்கா பணிகள் என்பதால் OSR நிதியின் மேற்கொள்ளப்பட வேண்டிய என்பதால் மேற்படி பணிக்காக பொது நிதி தலைப்பின் கீழ் ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையினை மாற்றம் செய்து OSR நிதி தலைப்பிலிருந்து செலவு மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டி மன்றத்தில் பொருள் வைத்திட வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:–1. மேற்படி பணிக்ககான செலவீனத்தினை பொது நிதியிலிருந்து தலைப்பிலிருந்து OSR நிதியிலிருந்து செலவு மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்

2. நகரமன்ற அனுமதியினை எதிர்நோக்கி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று செலவு மேற்கொண்டமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண்.3382/2018/இ3)

பொருள் எண். 42

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 14,15ல் காந்தி பூங்கா மேல்நிலை நீர்தேக்க வளாக உட்புறத்தில் பேவர்பிளாக் தரை அமைத்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.9.90இலட்சத்துக்கு, நகரமன்ற தீர்மான எண்.2659, நாள். 29.06.18ல் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 13.11.18 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | சதிவிகிதம் | மதிப்பீட்டை விட அதிகம்/ குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.D. மகேஷ் | (–) 0.02% | குறைவு |
| 2 | M/s. Big Box Engineering Pvt Ltd | 1.21% | அதிகம் |

அலுவலக குறிப்பு: 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய திரு.D. மகேஷ் என்ற ஒப்பந்ததாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.51/2018/இ3)

பொருள் எண். 43

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 18ல் சேலையூர் நகராட்சி மேல்நிலைப்பள்ளி வளாகத்தினுள் மழைநீர் கால்வாயுடன் ஆர்.சி.சி க்கு பலகை அமைத்தல் சிமெண்ட் சாலை மற்றும் கட்டிடம் பழுது பார்த்தல் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.7.70இலட்சத்துக்கு, நகரமன்ற தீர்மான எண்.2845, நாள். 29.09.18ல் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 13.11.18 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | சதிவிகிதம் | மதிப்பீட்டை விட அதிகம்/ குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.D. மகேஷ் | (–) 0.02% | குறைவு |
| 2 | M/s. Big Box Engineering Pvt Ltd | 0.94% | அதிகம் |

**அலுவலக குறிப்பு:** 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய திரு.D. மகேஷ் என்ற ஒப்பந்ததாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.124/2018/இ1)

பொருள் எண். 44

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட கிழக்கு தாம்பரம் வார்டு எண். 20ல் பாரதி பூங்கா அம்பேத்கார் சுடுகாடு ஆகியவற்றினை 2018–19 ஆம் ஆண்டு பராமரிப்பு பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.7.00இலட்சத்துக்கு தனிஅலுவலரின் முன்அனுமதி நாள். 2.11.18ல் அனுமதி அளிக்கப்பட்டதை தொடர்ந்து, மேற்படி பணிக்கு 20.11.18 அன்று வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளுக்கு ஒப்பு நோக்குப்பட்டியல் தயார் செய்து மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஒப்பந்ததாரர் பெயர் | சதிவிகிதம் | மதிப்பீட்டை விட அதிகம்/ குறைவு |
|---|---|---|---|
| 1 | திரு.D. மகேஷ் | 4.53 % | அதிகம் |
| 2 | M/s. Big Box Engineering Pvt Ltd | (–) 0.04% | குறைவு |

**அலுவலக குறிப்பு:** 1) மன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

2) வரப்பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைந்த ஒப்பந்தபுள்ளி வழங்கிய M/s. Big Box Engineering Pvt Ltd என்ற ஒப்பந்ததாரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்று தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கி நடவடிக்கை மேற்கொண்டதற்கு மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.124/2018/இ1)

பொருள் எண். 45

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் 2018–19ம் ஆண்டில் மேற்கொள்ளப்படும் பணிகளான பாதாள சாக்கடை வீட்டிணைப்பு பணிகள், குடிநீர் பணிகள், மின்பணிகள் மற்றும் தெருவிளக்கு சம்மந்தமான பணிகள் நகராட்சி பொது நிதி மற்றும் திட்டப் நிதியின் கீழ் ஒப்பந்தபுள்ளிகள் கோரும் ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு மாவட்ட ஒப்பந்தபுள்ளி மற்றும் மாநில அளவிலான ஒப்பந்தபுள்ளி மலர் ஆகிய தினசரி நாளிதழ்களில் விளம்பரம் செய்வதற்கு விளம்பர நிறுவனங்களுக்கு கட்டணத் தொகை வழங்குவதற்கு ஆகும் தோராய செலவீனம் தொகை ரூ.4.00 இலட்சத்திற்கு மன்றத்தின் நிர்வாக அனுமதி வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:– மன்றம் நிர்வாக அனுமதி வழங்கலாம்

(ந.க.எண். 51/2018/இ3)

பொருள் எண். 46

தாம்பரம் நகராட்சி எல்லைக்குட்பட்ட மேற்கு தாம்பரம் பகுதியில் உள்ள கன்னடப்பாளையம் நகராட்சி நடுநிலைப் பள்ளி, இரும்புலியூர் நடுநிலைப் பள்ளி, பழைய தாம்பரம் பள்ளி, ரங்கநாதபுரம் நகராட்சி மருத்துவமனை, ஜீவா வணிக வளாகத்தில் இயங்கி வரும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அலுவலகம், அம்பேத்கார் திருமண மண்டபம் ஆகிய இடங்களில் உள்ள குடிநீர் சுத்திகரிப்பான்கள் (RO) ஆண்டு பராமரிப்பு பணி மேற்கொள்ள அடிப்படையில் ரூ. 9.95 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்கொள்ள நகரமன்ற தீர்மான எண். 2061, நாள். 30.11.2017ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதின் பேரில் 30.11.2017ல் ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளின் குறைந்த ஒப்பந்தபுள்ளி அளித்த மெசர்ஸ். சிம்லா கூல்மேக்கர்ஸ் என்ற நிறுவனத்திற்கு நகரமன்ற தீர்மான எண்.2114, நாள். 29.12.2018 அளிக்கப்பட்டதின் பேரில் 30.11.2017ல் பணி உத்திரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்போது மேற்படி ஆண்டு பராமரிப்பு பணி 29.11.2018ல் அன்று முடிவடைவதால், இப்பணியினை தொடர்ந்து கொண்டு வரும் மெசர்ஸ். சிம்லா கூல்மேக்கர்ஸ் நிறுவனத்திற்கு டிசம்பர் 2018 முதல் நவம்பர் 2019 வரையிலான ஓராண்டு காலத்திற்கு பராமரிப்பு பணிக்காலத்தினை நீட்டிப்பு செய்திடவும், அதற்கான செலவீனத்தை ஏற்கனவே அளிக்கப்பட்ட அதே மதிப்பீட்டு விலை விகிதம் அடிப்படையாக கொண்டு ரூ. 9.95 இலட்சம் மதிப்பீட்டிற்கு மிகாமல் மெசர்ஸ். சிம்லா கூல்மேக்கர்ஸ் என்ற

நிறுவனம் மூலமே பணி மேற்கொள்ள வேண்டி மன்றத்தின் பார்வைக்கும், ஒப்புதலுக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு:– 1) மன்றம் அனுமதி வழங்கலாம்

2) மெசர்ஸ். சிம்லா கூல்மேக்கர்ஸ் நிறுவனத்திற்கு டிசம்பர் 2018 முதல் நவம்பர் 2019 வரையிலான ஓராண்டிற்கு பணி காலத்தினை நீட்டிப்பு செய்திட நகரமன்ற அனுமதி வேண்டி தனிஅலுவலர் அவர்களின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

3) ஓராண்டு காலத்திற்கு ஆண்டு பராமரிப்பு பணிக்கான செலவீனத் தொகை ரூ.9.95 இலட்சத்திற்கு நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

(ந.க.எண்.3382/2017/இ1)

பொருள் எண். 47

அரசாணை நிலை எண் 77 நாள்.13.04.2015 பள்ளிக்கல்வித்துறை 4(1) –ல் நகராட்சி பகுதிகளில் உள்ள பள்ளிக்கல்வு மற்றும் நகர / ஊரக மற்றும் உள்ளாட்சி மற்றும் நகராட்சி நிர்வாகம் (ம) குடிநீர் வழங்கல் துறைகளின் கீழ் உள்ள அனைத்து பள்ளிகளில் உள்ள கழிவறைகளின் பராமரிப்பு மற்றும் துப்புரவு பணிகள் மேற்கொள்ள உள்ளாட்சி மன்றங்களே மேற்கொள்ள வேண்டும் என்றும் மேற்கண்ட பராமரிப்புகளுக்கு கல்வி வரி (Education cess) மற்றும் திடக்கழிவு மேலாண்மை நிதிகளின் கீழ் மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.

1). நகராட்சி பள்ளிகள் 6 Nos.

2). அரசு மேல் நிலைப்பள்ளி காளமேகம் தெரு, கிழக்கு தாம்பரம்.

3). MGR நகர் நகராட்சி தொடக்கப்பள்ளி சேலையூர்.

4). ஆதி திராவிடர் நலப்பள்ளி, கடப்பேரி, திருநீர்மலை ரோடு, மேற்கு தாம்பரம்.

6 நகராட்சி பள்ளிகளில் 21 துப்புரவு பணியாளர்கள் மற்றும் 6 பாதுகாவலர்கள் பணிபுரிந்து வருகின்றனர். அரசு பள்ளிகளில் 3 பள்ளிகளுக்கு ஒரு துப்புரவு பணியாளர் என 3 துப்புரவு பணியாளர்கள் பணிபுரிந்து வருகின்றனர். மேற்படி பணியாளர்களுக்கு நகர மன்ற தீர்மான எண்.1981 நாள்.31.10.2017–ன் படி துப்புரவு பணியாளர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.346/– எனவும், துப்புரவு பாதுகாவலர்களுக்கு நாள் ஒன்றுக்கு ரூ.313/– எனவும் திரு.S.பொன்ராஜ் எண்டர்பிரைசஸ் பல்லாவரம் என்பவர்க்கு 2013–ம் ஆண்டு முதல் இப்பணியினை மேற்கொள்ள உத்திரவு வழங்கப்பட்டு பணி மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

